Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221

நதி: 33 பாலம்: 21 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் NOVEMBER 01, 2023

# உறுப்பினரை மௌனிக்க வைத்த ஒன்ராறியோ மாகாண சட்டமன்றம்

ஒன்ராறியோ மாகாணச் சட்டமன்றத்தின் ஹமில்ரன் மத்திய தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரான Sarah Jama இஸ்ரேல் - ஹமாஸ் மோதலைத் தொடர்ந்து 2023 ஒக்ரோபர் 10ஆம் திகதி X சமூகவலைத்தளத்தில் ஒரு பதிவையிட்டிருந்தார். அதில் அவர் "உடனடியான போர் நிறுத்தத்திற்கான ஓர் அழைப்பு" என்ற தலைப்பில் பின்வருமாறு கூறியிருந்தார்.

"பாலஸ்தீனப் பிரதேசத்தில் மனித உரிமைகள் நிலைக்கான ஐ.நா.வின் சிறப்பு அறிக்கையாளர் Michael Lynk கூறியவாறு பாலஸ்தீனத்தில் பலதலைமுறைகளாக ஆக்கிரமிப்பும் இனவெறியும் (apartheids) தொடர்கிறது. அதாவது, இனவெறி எனப்படுவது, ஓர் அரசு, திட்டமிட்டு ஒரு குழுவிற்கு அடிப்படை அரசியல் சட்ட மற்றும் சமூக உரிமைகளுக்கு, அப்பிரதேசத்தில் உள்ள இன்னொரு இனக்குழுவிற்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் முன்னுரிமை அளிப்பது ஆகும்.

காஸா (Gaza) பிரதேசத்தில் உள்ள மக்களுக்கான உணவு, எரிபொருள், மின்சாரம், குடிநீர் வழங்கலை நிறுத்துதல், வெள்ளை பொஸ்பரஸ் இரசாயனப் பொருட்களை வீசுதல், இஸ்ரேல் அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத காஸா பிரதேசத்தில் இருந்து மக்கள் வெளியேறக் கூடிய ஒரே ஒரு வழியை அழித்தல் போன்றவற்றின் மூலம் காஸா பிரதேசத்தில் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுகிறது. இந்த இனவெறியை நாம் தற்போது நேரடியாகவே காண்கிறோம். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்தில் இருந்து வரும் செய்திகள் எமக்கு மிகுந்த கவலையளிக்கின்றன.

75 ஆண்டுகால குடியேற்றக் காலனித்துவத்தில் வேரூன்றிய வன்முறை மற்றும் பழிவாங்கல் நடவடிக்கைகள் பல அப்பாவி மக்களின் உயிரைப் பறித்துள்ளது. உடனடியாக ஒரு போர் நிறுத்தம் வேண்டும் என நான் அழைப்பு விடுக்கிறேன். அழிவு மற்றும் மரணத்தை தரும் இந்த முடிவற்ற சுழற்சிக்குத் தீர்வொன்றை நாம் காண வேண்டும். பாலஸ்தீன நிலத்தின் அனைத்து ஆக்கிரமிப்புகளையும் முடிவுக்குக் கொண்டு வந்து இந்த இனவெறியையும்


Ontario MPP Sarah Jama

முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். இராணுவ விடயங்களில் தலையிடுவதைத் தவிர்த்து கனடா சமாதானத்தை உருவாக்கும் (peacemaking) ஒரு நாடு என்று இதுவரை காலமும் இருந்த வரலாற்றுக்கு ஆதரவாக செயல்பட வேண்டும். நடந்து கொண்டு இருக்கும் இந்த வன்முறையால் பாதிக்கப்படும் அனைவருக்காகவும் நான் கவலையடைகிறேன்."

மேலே கூறிய பதிவை X சமூக வலைத்தளத்தில் இட்டதைத் தொடர்ந்து அந்தப் பதிவில் இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய பயங்கரவாதத் தாக்குதலையும் அதனால் ஏற்பட்ட இஸ்ரேலியர்களின் உயிரிழப்பை அவர் குறிப்பிடவில்லை எனவும், அவர் இஸ்ரேலை ஒரு இனவெறி நாடு எனத் தாக்கியுள்ளார் எனவும், அதனால் போர் நிறுத்தத்தைக் கோருகிறார் எனவும் அவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதனைத் தொடர்ந்து Sarah Jama தனது X சமூகவலைத்தளத்தில் ஒக்ரோபர் 11ஆம் திகதி பின்வருமாறு கூறியிருந்தார். "எனது சமூகவலைத்தளப் பதிவு பற்றிப் பலருடைய கரிசனையான குரல்களை நேற்று நான் கேட்டேன். எனது தொகுதியில் உள்ளவர்கள் உட்பட பல கனடிய யூத மற்றும் இஸ்ரேலிய மக்கள் அனுபவித்த வலியையும் நான் புரிந்து கொள்கிறேன். அவர்களிடம் அவர்களது வலியை நான் புரிந்து கொண்டது பற்றி எனது நேற்றைய பதிவில் குறிப்பிடாததையிட்டு மன்னிப்புக் கேட்கிறேன்."

அப்பதிவைத் தொடர்ந்து இன்னொரு பதிவை அவர் X சமூகவலைத்தளத்தில் வெளியிட்டிருந்தார். அதில் அவர் பின்வருமாறு பதிவிட்டிருந்தார். "தெளிவாகச் சொல்வதானால் ஆயிரக்கணக்கான இஸ்ரேலிய குடிமக்கள் மீது ஹமாஸின் பயங்கரவாதத்தை நான் சந்தேகத்திற்கு இடமின்றிக் கண்டிக்கிறேன். அத்துடன் ஐக்கிய நாடுகள் சபையினால் குறிப்பிடப்பட்டதைப் போல் காஸாவில் பொது மக்களை முற்றுகையிட்டு அவர்கள் மீது இஸ்ரேல் குண்டு வீசுவது தவறானது என நான் நம்புகிறேன். எமது தேசிய புதிய ஜனநாயகக் கட்சி எடுத்துள்ள நிலைப்பாடான "பொதுமக்களுக்கு எதிரான வன்முறை ஒருபோதும் நியாயப்படுத்த முடியாது. மேலும் இந்த மோதலுக்கு இராணுவத் தீர்வு ஒன்று இல்லை" என்ற கோட்பாட்டை நான் நம்புகிறேன்."

இதைத் தொடர்ந்து ஒன்ராறியோ புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Marit Stiles ஒக்ரோபர் 23ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில், "Sarah Jamaவுடன் அவர் வெளியிட்ட X சமூகவலைத்தளப் பதிவைத்தொடர்ந்து அவரைத் தொடர்ந்து புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் குழுவில் வைத்திருப்பதற்கு ஓர் உடன்பாடு செய்திருந்தோம். அதில் அவரது

தொடர்ச்சி 05 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannenhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate Insurance

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com


2023
EXCLUSIVE INCENTIVES
Registration:
647-296-0596
THE GREATEST SALE
EXCLUSIVE INCENTIVES
ONE DAY ONLY!
FEATURING
THE 9HUNDRED
SIGNATURE RESIDENCES
THOMPSON TOWERS
THE POST
THE FIFTH
HORSESHOE RESIDENCES
MUSKOKA BAY RESORT
fourme
Tricycle
Up to 75K in CASH back!
1.9% Mortgage for 2 Years!
Extended Deposit Structures!
Positive Cash Flows!
5% Down Programs!
Free Assignments!
Right to Lease during occupancy!
& More!
PARA TISIKULASINGAM
Sales Representative
(647) 296-0596
www.ParaCity.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HOME LIFE / GTA REALTY INC.,Brokerage*
*Independently Owned and Operated
5215 Finch Ave E, Unit 203, Toronto, ON MIS 0C2
O:416.321.6969 | F: 416.321.6963



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# சம்பந்தன் பதவி துறப்பாரா?




தமிழ் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறக்க வேண்டும் என கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் பகிரங்க கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார். சுமந்திரன் இவ்வாறானதொரு கோரிக்கையை முன்வைத்துள்ளமை பலரையும் வியப்பிலாழ்த்தியுள்ளது.

சம்பந்தனுடன் சுமந்திரன் மிக நெருக்கமான ஒருவர் என்பது அனைவருக்கும் தெரியும். தமிழரசுக் கட்சிக்குள்ளேயும், ஒட்டுமொத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள்ளும் உள்ளவர்களில் சுமந்திரன் அளவிற்கு நெருக்கமானவர் சம்பந்தனுக்கு வேறு எவரும் இல்லை என்றே கூறலாம்.

சுமந்திரன் வெளியிடும் கருத்துக்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்குள் பல்வேறு விமர்சனங்களை தோற்றுவித்த சந்தர்ப்பங்களில் கூட சம்பந்தன் மௌனமாகவே இருந்திருக்கின்றார். அல்லது சுமந்திரனுக்கு சார்பாக கருத்து தெரிவித்திருக்கின்றார்.

சுமந்திரன் கட்சி சார்பில் தெரிவிக்கும் கருத்துக்கள் தான்தோன்றித்தனமானது என்றும், கட்சிக்குள் கலந்தாலோசனை செய்யாமால் அவர் தனது கருத்துக்களை வெளியிடுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்ற வேளைகளில், தான் சம்பந்தனிடம் கலந்தாலோசித்தே தனது கருத்துக்களை வெளியிடுவதாக சுமந்திரன் கூறி வந்திருக்கின்றார்.

இவ்வாறு, சம்பந்தனின் செல்லப் பிள்ளையாக இருந்த சுமந்திரன் ஏன் பொதுவெளியில் - பகிரங்கமாக சம்பந்தன் பதவி துறக்க வேண்டும் என்று தெரிவித்தார்? அதனை சம்பந்தனிடம் நேரடியாகவே தெரிவித்திருக்கலாம் அல்லவா? தமிழரசுக் கட்சிக்குள் இந்த கோரிக்கையை முன்வைத்து கட்சியின் கோரிக்கையாக இதனை முன்னெடுத்திருக்கலாம். சுமந்திரன் ஏன் அவ்வாறு செய்யவில்லை? இப்படியான கேள்விகள் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் எழுந்துள்ளன.



இரா. சம்பந்தன் அவருடைய முதுமை காரணமாக செயற்பாட்டு அரசியலில் பங்களிப்பு செய்யமுடியாதிருப்பதன் காரணமாகவே அவர் தனது பதவியைத் துறக்க வேண்டுமென தான் கோருவதாக சுமந்திரன் விளக்கமளித்துள்ளார்.

முதுமை காரணமாக சம்பந்தனின் உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அவரால் தொடர்ச்சியாக நாடாளுமன்றத்திற்கு வருகைதர முடியாதிருக்கின்றமை தொடர்பில் தாங்கள் கரிசனைகளைக் கொண்டிருப்பதாகவும், விசேடமாக தான் அந்த விடயத்தில் கரிசனை கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ள சுமந்திரன், தான் ஒரு சந்தர்ப்பத்தில், சம்பந்தனிடம் நேரடியாகவே பதவி விலகுமாறு கோரியதாகவும், அதன்போது சம்பந்தன் அதனை நிராகரித்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது திருகோணமலை மக்கள் தன்னை அந்த மாவட்டத்தின் முதலாம் நபராக தெரிவு செய்திருக்கின்றார்கள் என்றும், அவர்கள் தனது உடல் நிலைமைகளை அறிந்தே தெரிவு செய்திருக்கின்றார்கள் என்றும் சம்பந்தன் குறிப்பிட்டதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சம்பந்தன் தனது முதுமை நிலைமை காரணமாக அவரால் செயற்பாட்டு ரீதியான விடயங்களை முன்னெடுக்க முடியாதுள்ளது. ஆகவே, அவர் பதவியைத் துறக்க வேண்டும் என்பதுதான் தனது தனிப்பட்ட கருத்தாகவுள்ளது. அடுத்துவரும் காலத்தில் அது தொடர்பான சில நடவடிக்கைளை எடுப்போம் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றின் கலந்துரையாடல் நிகழ்ச்சி ஒன்றில் சம்பந்தன் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்விடயங்களை தெரிவித்தார்.

288 நாடாளுமன்ற நாட்களில் 39 நாட்கள் மட்டுமே சம்பந்தன் நாடாளுமன்றத்திற்கு வருகை தந்திருக்கின்றார் என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெறப்பட்டுள்ள தகவல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், அதனடிப்படையில், அவருடைய வருகை வீதம் 13.6 சதவீதமாக உள்ள நிலையில் அவருக்கு நாடாளுமன்ற படிகளாக 4 மில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. எரிபொருள், தொலைபேசி மற்றும் போக்குவரத்து உள்ளிட்டவற்றிற்காக 4 இலட்சத்து 19ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது மக்களின் வரிப்பணமாக உள்ளது. ஊழல் தடுப்புப் பற்றி பேசப்படுகின்ற இச்சந்தர்ப்பத்தில் இதுவும் ஒரு பிரச்சினையாக அமையாதா? என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே சுமந்திரன் தனது கருத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.



சுமந்திரனின் விளக்கம் சரியானதாக இருந்தாலும், "கட்சிக்குள் கூடி ஆராய்ந்து இது தொடர்பில் தீர்மானம் ஒன்றை எடுத்து சம்பந்தன் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் அவரிடம் முன்வைப்போம்" என்ற விதமாக சுமந்திரன் பதிலளித்திருக்கலாம் என்பது தமிழரசுக் கட்சிக்குள்ளிருந்து வரும் விமர்சனமாக உள்ளது.

சுமந்திரனின் கருத்துக்கள் தொடர்பில் சம்பந்தன் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவிடம் தொலைபேசியில் உரையாடியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சுமந்திரனின் தொலைக்காட்சி உரையாடலின்போது, அவர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் சம்பந்தன் தொலைபேசி மூலமாக தன்னுடன் உரையாடினார் என்றும், விரைவில் சுமந்திரன் தன்னை நேரில்வந்து சந்திக்கும்படி கோரியதாகவும், அவருடன் விரிவான கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதன் பின்னர், தான் தனது தீர்மானத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவுள்ளதாக சம்பந்தன் கூறியதாகவும் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

தான் பதவி விலக வேண்டும் என்கின்ற கருத்தை தொலைக்காட்சி ஊடகம் ஒன்றில் சுமந்திரன் பகிரங்கமாக தெரிவித்தமை சம்பந்தனுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதை புரிந்து கொள்ள முடிகின்றது.

எவ்வாறெனினும், தற்போது 90 வயதைக் கடந்துள்ள இரா. சம்பந்தன் எழுந்து நடக்கக்கூட முடியாத நிலைமையில் தளர்வடைந்துள்ளார். அவர் தற்போது தனது பதவியைத் துறந்து, கட்சிக்குள் செயலாற்றல் மிக்க ஒருவர் அதனை ஏற்றுக்கொள்வதே சிறந்த முடிவாக இருக்கும். சம்பந்தனுக்கு அது ஒரு கௌரவம்.

## கனடாவில்...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

இருந்தது. இதற்கு மேலதிகமாக, இஸ்ரேல் - பாலஸ்தீனத்தின் யுத்தம் மேலும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தலாம். இந்நிலைமை உலகப் பொருளாதாரத்தில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்வரும் மாதங்களில் யுத்தம் எவ்வாறு மாறும் என்பதனைப் பொறுத்தே, எதிர்காலத்தின் பொருளாதார நிலைமை தெரியவரும். எனினும், நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர உலகின் முக்கிய நாடுகளின் முயற்சிகள் பலனளிக்கும் என எதிர்பார்ப்போம்.



விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 . 724 . 7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# உறுப்பினரை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

மன்னிப்புக் கேட்கும் பதிவிற்கு பின்னர் நம்பிக்கையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு ஒத்துக் கொண்டிருந்தோம். இந்த இக்கட்டான நிலையில் சந்தேகத்திற்கு இடமின்றி அவருக்கு ஆதரவளிக்க எமது புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், அதன்பின்னரும் Sarah Jama பல ஒருதலைப்பட்சமான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இது எமது சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டுப்பணி முயற்சிக்கு ஊறுவிளைவித்தது. அத்துடன் அவர்மீது எமது சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்திருந்த நம்பிக்கையை உடைத்தது. இதனால், Sarah Jamaஐ ஒன்ராறியோ புதிய ஜனநாயக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் குழுவில் இருந்து நீக்குகிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

X சமூகவலைத்தளத்தில் Sarah Jama இட்டபதிவிற்காக இரண்டு கிழமைகளின் பின்னர் அவரது கட்சி அவரை சட்டமன்ற உறுப்பினர் குழுவில் இருந்து நீக்கியது. ஒக்ரோபர் 23ஆம் திகதி நண்பகலில் இருந்து Sarah Jama ஒன்ராறியோ சட்டமன்றத்தில் ஒரு சுயேச்சை உறுப்பினராக இருந்து வருகிறார்.

29 வயது மாற்றுத்திறனாளியான Sarah Jama, 2023 மார்ச் மாதத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். சோமாலியா வழித்தோன்றலான Sarah ரொறொன்ரோவில் 1994ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் Cerebral Palsy குறைபாடுடன் பிறந்தவர். தான் இயங்குவதற்குச் சக்கர நாற்காலியைப் பயன் படுத்துகிறார். இவர் McMaster பல்கலைக்கழகத்தில் சமூக அறிவியலில் பட்டம் பெற்றவர். மார்ச் மாதத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இவர் 54% வாக்குகளைப் பெற்று கனடாவில் மத்திய அல்லது மாகாண அரசிற்கு முதலாவதாகத் தெரிவு செய்யப்பட்ட ஒரு சோமாலிய இனப் பெண் என்ற பெருமையைப் பெற்றார். இவருடைய தேர்தல் பிரசாரத்தின்போது அவர் முன்னர் கூறிய, "இஸ்ரேல் ஓர் இனவெறி அரசு" என்ற செய்திகள் வெளிவந்தன. அவர் அதற்கு அப்போது மன்னிப்புக் கேட்டிருந்தார்.

Sarah Jamaவின் X சமூகவலைத்தளப்பதிவுகளுக்கு ஒன்ராறியோ முதல்வரும் பழமைவாதக் கட்சியின் தலைவருமான Doug Ford கடும் கண்டனத்தை தெரிவித்ததுடன் தனது X சமூகவலைத்தளத்தில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.




The constituency office of Ontario NDP Leader Marit Stiles
Thanks: Gord Bullock/CTV News

"புதிய ஜனநாயகக்கட்சியின் தலைவர் Marit Stiles செய்யாததை நான் செய்கிறேன். Sarah Jama உடனடியாகத் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக வேண்டும். Sarah Jamaஇற்கு யூத எதிர்ப்புத் தொடர்பாக (antisemitism) நீண்ட மற்றும் நன்கு ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு உள்ளது. அவரிடம் தீவிரமான வெறுப்புணர்ச்சிப் பார்வைகள் (hateful views) உள்ளன. அவர் அப்பாவி யூத மக்கள் கற்பழித்து கொலை செய்வதை பகிரங்கமாக ஆதரிக்கிறார். அவரது வெறுப்பான கருத்துகளுக்கு ஒன்ராறியோ மாகாணத்தில் இடம் இல்லை. அவர் உடனடியாகத் தனது சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலகவேண்டும்."



Marit Stiles, Ontario NDP leader
Thanks: Zoomer Radio

இவ்வாறு முதல்வரது X சமூகவலைத்தளத்தில் ஒக்ரோபர் 11ஆம் திகதி தெரிவித்திருந்ததற்கு Sarah Jamaஇனுடைய சட்டத்தரணியால் முதல்வரது X சமூகவலைத்தளத்தில் உள்ள இந்தப் பதிவை உடனடியாக நீக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர் மீது நட்டஈடு கேட்டு வழக்குத் தொடரப்படும் என்ற "Cease and desist" எனப்படும் ஆணை முதல்வருக்கு ஒக்ரோபர் 19ஆம் திகதி வழங்கப்பட்டது.

இவ் ஆணைக் கடிதத்தில், "Doug Fordஇனுடைய அறிக்கை Sarah Jama யூத மக்கள் மீது இனப்பாகுபாடு (Racist) காட்டுபவர் என்றும், பயங்கரவாதத்திற்கு அனுதாபம் காட்டுபவர் என்றும், சட்டமன்ற உறுப்பினர் பதவிக்குத் தகுதியற்றவர் என்றும் குறிப்பிடுகிறது. இது Sarah Jamaஇன் நற்பெயருக்கு கடுமையான தீங்கு விளைவிக்கிறது. அத்துடன் இவ் அறிக்கை தொடர்ந்தும் அவருக்குத் தீங்கு விளைவித்துக் கொண்டிருக்கிறது. Doug Ford உடனடியாக இவ் அறிக்கையைத் திரும்பப் பெற வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

Sarah Jamaஇனுடைய சட்டத்தரணியான Stephen Ellis இவ் ஆணையில் Doug Fordஇற்கு அவருடைய அறிக்கையைத் திரும்பப்பெற்று Sarah Jamaஇடம் பொதுமன்னிப்புக் கேட்க ஏழு நாட்கள் அவகாசம் கொடுத்திருந்தார். இவ் ஆணைக்குப் பதில் அளித்த Doug Fordஇனுடைய சட்டத்தரணி, "முதல்வர் அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுப்பதாகவும், அவர் தனது அறிக்கையை நீக்க மாட்டார் என்றும் Sarah Jama சட்ட நடவடிக்கையைத் தொடர்ந்தால் அவர் தீவிரமாக (vigorously) அதை எதிர்க்கவும் தயாராக இருக்கிறார்" எனப் பதில் அளித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து ஒக்ரோபர் 28இல் கூடிய சட்டமன்றக் கூட்டத்தில் பழமைவாதக் கட்சி அரசு Sarah Jamaஐ சட்டமன்றத்தில் மௌனிக்க வைப்பதற்கு (Censure) வாக்களித்து அதை அமல்படுத்தினர். அதாவது, Sarah Jama தனது ஒக்ரோபர் 10ஆம் திகதியின் X சமூகவலைத்தளப் பதிவை நீக்கி விட்டு முறையாக சட்டமன்றத்தில் மன்னிப்புக் கேட்கும்வரை அவர் சட்டமன்றத்தில் பேசுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் குழுவிடம், Doug Fordஇற்கு எதிராகச் சட்டத்தரணி மூலம் ஆணை அனுப்ப முன்னர், Sarah Jama கலந்து ஆலோசனை செய்யாததும், அவரை புதிய ஜனநாயகக் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் குழுவில் இருந்து Marit Stiles வெளியேற்றியதற்கு ஒரு காரணம். ஆனாலும், Marit Stiles உம் அவரது புதிய ஜனநாயகக் கட்சியினரும் Sarah Jamaஐ சட்டமன்றத்தில் மௌனிக்க வைக்கும் பிரேரணைக்கு உடன்படாமல் அதற்கு எதிராகவே வாக்களித்தனர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் Marit Stiles பேசும்போது, "ஓர் உறுப்பினர் சட்டமன்றத்தில் பேசுவதற்கும், வாக்களிப்பதற்கும் உள்ள உரிமையைப் பறிக்க அரசாங்கம் அதன் பெரும்பான்மையைப் பயன்படுத்துவது ஒரு தீவிரமான நடவடிக்கையாகும். இது ஹமில்ரன் மத்திய தொகுதி வாக்காளரின் உரிமையைப் பறிக்கும் செய்கையாகும்" என்றார்.

ஒன்ராறியோ லிபரல் கட்சி Sarah Jamaஐ சட்டமன்றத்தில் மௌனிக்க வைக்கும் பிரேரணைக்கு வாக்களிக்காமல் சட்டமன்றத்தை விட்டு வெளியேற்றி யிருந்தது. சட்டமன்றத்தில் Sarah Jamaஐ மௌனிக்க வைக்கும் பிரேரணை அமல்படுத்தப்பட்டுள்ளபடியால், Sarah Jama தனது X சமூகவலைத்தளப் பதிவை நீக்கி சட்டமன்றத்தில் வாய்மொழியாக மன்னிப்புக் கேட்கும்வரை அவரை சபாநாயகர் சட்டசபையில் பங்குபற்றுகிறார் என அங்கீகரிக்க மாட்டார். ஆனால், Sarah Jama சட்டமன்ற வாக்கெடுப்புகளில் தனது வாக்கைப் பதிவு செய்யலாம். அவரால் சட்டமன்றத்தில் உரையாற்ற முடியாது.

பழமைவாதக்கட்சி அரசின் இந்த நடவடிக்கைக்குப் பிறகு முதல்வர் Doug Fordஇற்கு ஆதரவும், எதிர்ப்பும் பெருமளவில் கிடைத்து வருகின்றன. அதேபோல் Sarah Jamaஇன் X சமூகவலைத்தளப் பதிவிற்கும், புதிய ஜனநாயகக்கட்சி தலைவர், Sarah Jamaவை புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் குழுவில் இருந்து நீக்கியதற்கும் ஆதரவும், எதிர்ப்பும் பெருமளவில் கிடைத்து வருகிறது.



புதிய ஜனநாயகக் கட்சி தலைவரின் அலுவலகம் ஒக்ரோபர் 24ஆம் திகதி சேதப்படுத்தப்பட்டுள்ளது. அவரது அலுவலக கண்ணாடி வெளிச்சுவரில் "பாலஸ்தீனத்தை விடுவி" என்றும் "உங்கள் கைகளில் இரத்தம் உண்டு" எனவும் ஒட்டப்பட்டுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் குழுவில் இருந்து Sarah Jama வெளியேற்றப்பட்ட பின்னர் அவர் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், தான் ஹமில்டன் மத்திய தொகுதியைத் தொடர்ந்தும் பிரதிநிதித்துவப்படுத்துவேன் என உறுதியளித்தார். அவருடைய தொகுதி மக்கள் பலர் அவரிற்கு ஆதரவாகவே உள்ளனர். அவர் மேலும் தெரிவிக்கையில், NDPயின் முடிவு தனக்கும், தனது பணியாட்களுக்கும் ஆச்சரியமாக இருந்தது. அத்துடன் NDP அவரை உடனடியாகவே அவர்களது மின்னஞ்சல் மற்றும் கணினித் தொடர்புகளில் இருந்து தடைசெய்துள்ளதால் தொகுதி உறுப்பினர்களது கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் உள்ளது. தொகுதி மக்களைச் சற்றுப் பொறுமையாக இருக்கும்படியும், தான் விரைவில் தொடர்பு கொள்வதாகவும் கூறியுள்ளார். தான் தொடர்ந்தும் தனது தொகுதி மக்களுக்கு ஆதரவாக இருப்பேன் எனவும் உறுதியளித்துள்ளார்.

## நாமும் நமது இல்லமும் 641

# கனடாவில் மாறாத வட்டி வீதம்



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய மத்திய வங்கி, ஒக்ரோபர் 26, 2023 அன்று கூடியபோது கனடிய வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தாமல் விட்டுள்ளது. கடந்த 20 வருடங்களில் அதிகூடிய வட்டி வீதமாகிய 5% என்ற எண்ணிக்கையிலேயே வட்டி வீதத்தையே மாற்றாமல், மத்திய வங்கியின் ஆளுநர் ரிவ் மக்கெலம் (Tiff Macklem) விட்டுள்ளார். கடந்த இரு தடவை வட்டிவீதம் மாறாமல் உள்ளது. மார்ச் 2022ஆம் ஆண்டிலிருந்து 10 தடவைக வட்டி வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, வட்டி வீத அதிகரிப்பால் கனடியர் தமது செலவை மிகவும் கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளனர். எனினும், மாறும் வட்டி வீதத்தில் வைத்திருப்பவர்களில் (Variable Interest Rate) 30%இற்கு மேற்பட்டோர் தமது நிலைமை மோசமடைந்து வருவதாக தமது ஆதங்கத்தை தெரிவிக்கின்றனர். இதனால் கனடாவின் சில மாகாணங்களின் முதல்வர்கள், கனடிய மத்திய வங்கியின் ஆளுனரிற்கு வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டாம் எனக் கேட்டு இருந்தனர். ஆனால், தமது முடிவில் முதல்வர்கள் குறுக்கிடுவது சரியல்ல, என தனது ஆதங்கத்தை (எண்ணத்தை) வெளிப்படுத்தியிருந்தார்.

பணவீக்கத்தை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்காக வட்டிவீதத்தை அதிகரிக்க வேண்டியிருந்தது எனவும், பணவீக்கம் குறையாமல் இருப்பின் தமது எண்ணத்தில் மாற்றம் இருக்கும் எனவும் தெரிவித்திருந்தார். எனினும் தான் எதிர்பார்த்தது போலவே பணவீக்கம் இறங்கி வருவதாகவும், தமது இலக்கான 2%ஐ அடையும்வரை தமது நோக்கம் சரியான பாதையில் செல்லும் எனவும் தெரிவித்திருந்தார். இந்த வட்டிவீத அதிகரிப்பால் பணவீக்கம் இறங்கத் தொடங்கினாலும், அவர் எதிர்பார்க்கும் பெறுமதியை அடைய நீண்டகாலம் எடுக்கலாம் என தெரிய வருகின்றது. 2022ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 8.1% ஆக இருந்த பணவீக்கம் 3.8%ஆகக்



குறைந்தது சிறப்பானதாகும். வட்டி வீத அதிகரிப்பால், பொருளாதார வளர்ச்சியும் இறங்கத் தொடங்கியது. பல நிறுவனங்கள் தமது தொழிலாளர்களை தொழிலில் இருந்து இடைநீக்கம் செய்து வருவதும் தெரிந்ததே.

கனடியப் பொருளாதாரம், பொதுவாக மந்தநிலையில் இருப்பது கண்கூடு. அண்மைக்காலங்களில் வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள், தொழில்புரிவதில் பெரிய சிக்கல்கள் இருப்பது தெரிய வருகின்றது. தொழில் நிலைமை மோசமடைந்து வருகின்றது. எனினும், வாடகை அதிகரித்தே செல்கின்றது. அனைவரினாலும் குறிப்பிட்ட நேரத்தில் மாதாந்த கொடுப்பனவு செலுத்துவதில் மிகவும் தாமதம் ஏற்படுவதும் தெரிய வருகின்றது. இந்நிலைமை தொடர்ந்தால் ஆதன உரிமையாளர்களிற்கு, தமது மாதாந்த அடமானக்கடனின் கொடுப்பனவில் சிக்கல் ஏற்படும்.

இன்றுவரை ஆதன விலை நாம் எதிர்பார்த்ததுபோல, இறங்கவில்லை. சில பகுதிகளில் ஆதனவிலை குறைந்தும் உள்ளது. வட்டி வீத அதிகரிப்பால் கனடா ரீதியில் 17% விலை இறக்கம் ஏற்பட்டது. 2023இன் ஆரம்பத்தில் வட்டிவீத ஏற்றத்தை நிறுத்தியபோது, ஆதனவிலை மீண்டும் ஏறத் தொடங்கியது. தொடர்ச்சியாக மத்திய வங்கி வட்டியை அதிகரிக்க ஆதனவிலை மீண்டும் இறங்கத் தொடங்கியது. எனினும், புதியவர்களின் வருகைக்கேற்ப ஆதன இருப்பிடம் இல்லாததால் இருக்கின்ற ஆதனத்திற்கே போட்டிபோட வேண்டியுள்ளது. அதிக ஆதனத்தை சந்தைக்கு கொண்டு வருவதற்காக அரசுகள் புதிய வரிச்சலுகைகளை செய்கின்றது. குறிப்பாக ஒன்றாரியோ அரசு வாடகைக்காக நிர்மாணம் செய்யும் ஆதனங்களிற்கு மிகப்பெரிய வரிச்சலுகையை அறிவித்துள்ளது.

ஏற்கனவே உக்ரைன், ரஷ்யாவின் யுத்தத்தால் உலகளாவிய மக்கள் உணவுப் பொருட்கள், எண்ணெய் போன்றவற்றில் தாக்கத்தை காணக்கூடியதாக

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)




Condo for Sale

- Tridel Unit
  1 Bedroom + Den Condo for Sale
- Kennedy & Highway 401
  Den Can be used as Bedroom 24 hours Security
- Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
- Available anytime.



For more info. Please Call....
GEORGE PARANTHAMAN
416.277.9044

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2
Tel: 416-321-6969 * Independently owned and operated.

# அம்பிட்டிய தேரரின் அட்டகாசம்!

- விகிர்தன் -

தமிழர்களை சிங்களவர்கள் வெட்டிக் கொலை செய்வார்கள் என அம்பிட்டிய சுமணரத்ன தேரர் தெரிவித்துள்ளமை தொடர்பில் தமிழ் கட்சிகள் அனைத்தும் கடும் எதிர்ப்பினை தெரிவித்துள்ளன. தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள், மலையக் கட்சிகள், அரசாங்கத்துடன் சார்ந்து இயங்கும் தமிழ் கட்சிகள் என அனைத்துத் தரப்பும் தேரரின் இந்த ஆவேசமான பேச்சைக் கண்டித்துள்ளன.

இந்த தேரரின் இவ்வாறான இன, மத வெறுப்புணர்வைத் தூண்டும் பேச்சுக்கள், செயற்பாடுகள் என்பன புதிதானவை அல்ல. நீண்ட காலமாகவே அவரது நட வடிக்கைகள் மிக மோசமானவையாகவே இருந்து வந்துள்ளன. ஆனால், எந்தவொரு அரசாங்கமும் அவர்மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பது தான் இங்கு சுட்டிக்காட்ட வேண்டிய ஒன்றாகவுள்ளது.

கடந்த காலங்களில் இவர் பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர் களைக்கூட தாக்க முயன்றிருக்கின்றார், தாக்கியுமிருக்கின்றார். மதபோதகர் ஒருவரை கன்னத்தில் அறைந்துமிருக் கின்றார். அம்பிட்டிய தேரரின் அட்டகாசங்கள் சமூகவலைத்தளங்களிலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

ஒரு பௌத்த துறவிக்கு இருக்க வேண்டிய பண்புகளில் கடுகளவு கூட இவருக்கு இல்லை என்றுதான் கூறவேண்டும். ஒரு வெறியன் போலவும், மனநோயாளி போலவும் இவரது நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இவரது வெறித்தனமான வார்த்தைப் பிரயோகங்களுக்கு இவரை சட்டப்படி சிறையிலடைக்க வேண்டும், மனநோயாளி என்றால் மனநோய் வைத்தியசாலையில் சேர்க்க வேண்டும்.

அண்மையில், ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க மட்டக்களப்பிற்கு பயணம் செய்த போது தும்புத்தடி, விளக்குமாறுகளுடன் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தினார். ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு மட்டக்களப்பில் வைக்கப்பட்டிருந்த பாரிய ‘கட்அவுட்’ மீது தும்புத்தடியால் அடித்தார். ஜனாதிபதி ரணிலும் இதனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை.

மட்டக்களப்பில் மூன்று சமூகங்களையும் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். இவரது இன, மதவாத கருத்துக்கள், செயற்பாடுகள் வன்முறையை ஏற்படுத்தும் ஆபத்துள்ளது.

பிற மதங்களை அவமதிக்கும் விதமாக பேசிய மதப்போதகர் ஜெரோம் பெர்னாண்டோ, நகைச்சுவை பேச்சாளர் நடாஷா எதிரிசூரிய போன்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொண்ட அரசாங்கம் தமிழ் மக்களை வெட்டிக் கொல்ல வேண்டும் என பகிரங்கமாக கூச்சலிடும் அம்பிட்டிய தேரர் மீது நடவடிக்கை மேற்கொள்ளாதது ஏன்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் மனோ



கணேசன் எழுப்பும் கேள்வி முக்கியமானது.

மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் தரை காணிகளில் தனியார் ஆக்கிரமிப்புகள் இடம் பெற்றுள்ளதாகக் கடந்த சில மாதங்களாக குற்றச்சாட்டுகள் முன்வைத்துவரும் நிலையில், மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரதேசத்தில் கடந்த 15ஆம் திகதி அம்பிட்டிய தேரர் தலைமையில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா ஹம்பத்தின் பங்களிப்புடன் புதிய புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

மாதவனை மயிலத்தமடு பிரதேசம் பாரம் பரியமாக தமிழ் பால் பண்ணையாளர் களால் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும், அப்பகுதியை சட்டவிரோதமாக ஆக்கிர மித்துள்ள சிங்கள குடியேற்றவாசிகளுக்கு ஆதரவாக புதிய புத்தர் சிலை வைக்கப் பட்டுள்ளதாகவும் தமிழ் விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

இந்த பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் ஜனாதி பதி செயலகத்தில் விசேட கலந்துரை யாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் செயலாளர், ஆளுங்கட்சி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர், பொலிஸ்மா அதிபர் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பு என்பன இந்த நாட்டின் முதுகெலும்பாகும் எனத் தெரிவித்த ஜனாதிபதி இவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், வெளி மாவட்டங்களில் இருந்து வந்து மட்டக்களப்பு மயிலத்தமடுவில் விவசாயம் மேற்கொள்பவர்களுக்கு அவர்கள் வாழும் மாவட்டங்களிலேயே விவசாயம் மேற்கொள்ள மாற்று இட ஒதுக்கீடுகள் வழங்க வேண்டும் என்றும் தெரிவித்ததோடு இது தொடர்பில் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரையும் விடுத்தார்.

இவ்வாறு மாற்று இடங்கள் வழங்குவதன் ஊடாக பண்ணையாளர்கள், விவசாயிகள் என இருத்தரப்பினருடைய பிரச்சினைகளும் முடிவிற்கு வரும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும், பண்ணையாளர்களின் பிரச்சினை கள் முடிவிற்கு வரும்வரை கால்நடை களுக்கு உணவுகளை வழங்க தேவை யான உதவித் தொகைகளை வழங்கு மாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார். ஆனால், இவை எதுவும் நடைமுறைப்படுத்தப்பட்டதாக தெரியவில்லை.

ஆனால், அம்பிட்டிய தேரர் வேகமாகவே செயற்படுகின்றார். அவரது அட்டகாசம் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

இவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ் அரசியல் கட்சிகள் அரசாங்கத்திற்கு கொடுத்து வரும் அழுத்தம் காரணமாக தேரருக்கு எதிரான முறைப்பாடுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இப்போது தெரிவித்துள்ளார்.

அம்பிட்டிய சுமண தேரருக்கு எதிராக பல்வேறு தரப்பினராலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பொலிஸார் விசேட விசாரணைகளை மேற் கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கை களை முன்னெடுக்கவுள்ளனர் என அமைச்சர் கூறியுள்ளார். ஆனால், தேரர் தொடர்பில் சட்ட நடவடிக்கைகள் துரித மாக முன்னெடுக்கப்படுமா என்பதில் தமிழ் மக்களுக்கு சந்தேகமாகவே உள்ளது.

ஒவ்வொரு பிரச்சினைக்கும் மூன்றுவகையான தீர்வுகள் உண்டு.
ஏற்றுக்கொள்வது,
மாற்றிக்கொள்வது, விட்டு விடுவது.
ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.
மாற்றவே முடியாத விடயங்களை விட்டுத்தள்ளுங்கள்.

## என் தாத்தா



எனைப்பற்றி இழுத்து தன் மடியில்
இருத்தி
உச்சி மோந்து உவப்பாக
பேசி உலகை எனக்கு
புரிய வைப்பார்-எனக்கு கணக்கு
வராவிட்டால் தன் மனக்
கணக்குப் போட்டு அல்ஜீப்ரா
சூத்திரம் போல் விடை விளக்கிச்
சொல்வார்
சிலேட்டுக் கணக்கும்
சிறுநோட்டுக்கணக்கும் பிழை
ஆகும் ஆனால் அவர்
விடை பிழை ஆனதில்லை-
தடை ஏதும் சொல்லாது
விளையாடச் சொல்வார்
தமிழைப்படி ஆங்கிலம் அறி
என்பார் உணவுண்ண அழைத்தால்
உடனே வருவார் நமக்கு மோர் சாதம்
அவருக்கோ பால் சாதம் அது பிடிக்கும்
அப்பா அவர் அருகே நின்று பேச
மாட்டார்
நானோ அவர் மடியில் எப்போதும்
ஒரு முறை பள்ளி வந்து ஒரு
சச்சரவு என்னை திட்டிய ஆசிரியரை
உண்டு இல்லை என ஆக்கிவிட்டார்
தான் உண்டு தன் பணி உண்டு என
இருப்பார் அதிகம் படிக்காத அவர்
அறிந்தவை ஏராளம் புரிந்தவை பூவுலகும்
நண்பர்களையும் சொல்லால் சுட மாட்டார்
சுவையாய் கதை சொல்வார்
அவை அன்றும் இன்றும் அவர்
நினைவாய் என்னில் உலா வரும்
என்/அவர்- வீட்டுத்திண்ணை
அவரின்றி எனக்கு பிடிக்க வில்லை
வீடும் விற்று விட்டோம்
ஆனாலும் ஊருக்கு போகையிலே
ஒரு பார்வை அதன் மேலே
தாத்தா இருப்பது போல்
இருப்பதால்-இன்றும் -?

ஆசிரியர் எனை அடித்தார்
எனக்கேட்டு ஆசிரியரை திட்ட
அவர் பள்ளிக்கே வந்தார்
ஆசிரியர் ஆடிப்போய் விட்டார்
ஆறடி அஞ்சாத குரல் ஆளுமை
ஊருக்கு நீதி சொல்வார்
தன் வீட்டுக்கு நீதி சொல்வார்
யாருக்கும் துயர் எனில் நிதி
தருவார் கடனாகக் கணக்காக
இருப்பார்-கவலைப் படாதவர்
எங்கும் போவதென்றால் நடைதான்
எனக்கு தின் பண்டம்
என் தந்தைக்கு பணம்
எப்போதும் வழங்கும் வற்றாத
குற்றாலம்-திண்ணை அவர்
சொத்து-திரிகால அனுபவம் அவர்
சிங்கம் என சிறிய தாத்தாவின்
கூற்றில் சிறிதும் பொய்யில்லை
கீற்றாய் அன்பால் காப்பார்
நேற்றைக்குபோல் இருக்கிறது
நெடு துயில் ஆழ்ந்த நாள்-
என் மனத்திரையில்
செந்தாமரை சித்திரமாய்.

- ஆரா

# நானிலம் போற்றும் நட்பு - 32



- அகணி -
authorakani@gmail.com

"உறின்நட்டு அறினொருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்." (அதிகாரம் தீ நட்பு, குறள் 812) என்ற குறளிற்கு "தமக்கு பயன் உள்ள போது நட்பு செய்து பயன் இல்லாத போது நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றாலும் என்ன பயன், இழந்தாலும் என்ன பயன்." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"தமக்குப் பயன் கிடைத்தால் நட்புச் செய்து, இல்லையென்றால் நீங்கிப் போகும் தகுதியில்லாதவரது நட்பைப் பெற்றால்தான் என்ன? விட்டால்தான் என்ன?" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"தந்நலமுள்ளவர் நட்பைப் பெறுவதும் ஒன்றுதான். இழப்பதும் ஒன்றுதான்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"தமக்குப் பயன்கிடைக்கும்போது நண்பராக இருந்துவிட்டு பயனில்லாதபோது பிரிந்து விடுகின்றவர்களின் நட்பு, இருந்தால் என்ன? இழந்தால்தான் என்ன?" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.

தந்நலமுள்ள நண்பர்களால் பயனில்லை என்ற கருத்தை இக்குறள் எடுத்துக் கூறுகிறது.

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம். இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதின்மூன்றாவது பாடலைக் கவனிப்போம்.



"மாசுஅறக் கழீஇய யானை போலப்
பெரும் பெயல்உழந்த இரும்பிணர்த் துறுகல்
பைதல் ஒருதலைச் சேக்கும் நாடன்
நோய் தந்தனனே தோழி!
பசலை ஆர்ந்தன குவளை அம்கண்ணே".
இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.
தோழியை விழித்துத் தலைவி கூறுகிறாள்.

"நமது தலைவன் மலைக்காட்டை யுடையவன், அவனுடைய மலையிலே உள்ள உருண்டையான கற்கள் சுரசுரப்பாக உள்ளவை. அந்தக் கற்களின் மேல் தூசி படிந்திருந்தன. பெரிய மழையினால் அத்தூசிகள் கழுவப்பட்டு அக்கற்கள் கன்னங் கரேல் என்று பளிச்சிடுகின்றன. இக்கற்கள் பசுமையான இடங்களிலே கிடக்கின்றன. அவை பார்வைக்கு அழுக்குப் போகும்படி குளிப்பாட்டப்பட்ட யானைகளைப் போலக் காணப்படுகின்றன.

இப்படித் தன் அழுக்குகள் நீங்கித் தம் இயற்கை ஒளியுடன் விளங்குகின்ற குண்டுக் கற்கள் நிறைந்த மலை நாடன், தன் இயல்பின்படி நடந்து கொள்ளவில்லை. என்னை விட்டுப்பிரிந்ததன் மூலம் என் கண்களின் இயல்பை மறைக்கும் பசலை நோயை எனக்குத் தந்தான். என் கண்களின் அழகை மறைக்கும் பசலை நோயை நீக்கி அவற்றை இயற்கையழகுடன் விளங்கச் செய்வதே அவன் கடமை. இதுவே அவனுக்கு ஏற்ற தன்மையுமாகும்.

ஆனால் அவன் என்னைக் கூடிப் பிரிந்ததனால் குவளை மலர்களைப் போலிருந்த எனது கண்கள் அழகிழந்தன. பசலை நோயால் அழகு மறைந்தன. என் மாறுபாட்டிற்குக் காரணம் இதுதான். இந்த மாறுபாட்டை நானாகத் தேடிக்கொள்ள வில்லை. பிரிந்த தலைவனே எனக்கு உள்ளத் துயரையும் இத்தகைய உடல் மாறுபாட்டையும் அளித்தான்."

இது கபிலர் பாடியது. தலைவன் பிரிந்தபின், தலைவியிடம் உள்ள வேறுபாடுகளைக் கண்டு தோழி வருந்தினாள். அத்தோழிக்குத் தலைவி, தன் துன்பத்திற்கான காரணத்தைக் கூறுகின்றாள். இந்தப் பாடல் குறிஞ்சித் திணை சார்ந்தது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதின்நான்காவது பாடலைக் கவனிப்போம்.
"அமிழ்துபொதி செந்நா அஞ்சவந்த
வார்ந்துஇலங்கு வையெயிற்றுச், சின்மொழி அரிவையை
பெறுகதில் அம்ம! யானே, பெற்றாங்கு
அறிகதில் அம்ம! இவ்வூரே! மறுகில்
நல்லோர் கணவன் இவன் எனப்
பல்லோர் கூற யாம் நாணுகம் சிறிதே."

இப்பொழுது இந்தப் பாடலின் பொருளினைக் கவனிப்போம்.

"நான் விரும்பும் தலைவி செம்மையான நாவையுடையவள். அவளுடைய நாவிலே அமிழ்தம் போன்ற உமிழ் நீர் நிறைந்திருக்கும். அந்த நாக்கு அஞ்சும்படி வரிசையாக விளங்குகின்ற கூர்மையான பற்கள் இருக்கின்றன. பற்கள் கூர்மையாக இருந்தாலும் அவற்றின் வரிசை அமைப்பும், வெண்மையான தோற்றமும் எனது உள்ளத்தைக் கவர்வன. அவள் சளசளவென்று உளறிக் கொண்டேயிருக்க மாட்டாள். சில மொழிகளை மட்டும் வேண்டியபொழுது சொல்லுவாள். அது இனிமையும் பொருட்செறிவும் பொருந்தியிருக்கும். இந்த அரிவையை நான் மடலேறியாவது என் காதலியாகப் பெறுவேன்.

நான் அவளை மனைவியாகப் பெற்றபின் இந்த ஊரில் உள்ளவர்கள் அவளையும் என்னையும் பற்றித் தெரிந்து கொள்ளட்டும்.

நான் தெருவிலே நடந்து போகும்போது இவ்வூரார் என்னை உற்று நோக்காமல் இருக்க மாட்டார்கள். என் காதலியைப் பெறுவதற்கு நான் செய்த முயற்சியை எண்ணிப்பார்ப்பர். மடலேறுதலாகிய துணிகரமான காரியத்தைச் செய்த என்னை எப்படி மறப்பார்கள்? அவர்கள் என்னைப் பார்த்தவுடன் அந்த நல்ல அரிவையின் கணவன் இவன் தான் என்று பலரும் சொல்லுவார்கள். அவர்கள் இச்சொற்களைச் சொல்லும்போது நானும் மடலேறிய செயலை எண்ணிச் சிறிது நாணமடைவேன்."

இது தொல்கபிலர் என்னும் புலவர் பாட்டு. தலைவியைச் சந்திக்க வந்த தலைவனுக்குத் தோழி உதவி செய்ய மறுத்து விட்டாள். அவன் காரியத்திற்குத் தன்னால் துணை செய்ய முடியாது. என்று கண்டிப்பாகத் தெரிவித்து விட்டாள். அப்பொழுது தலைவன் "எப்படியாவது உன் தலைவியை நான் அடைந்தே தீர்வேன்" என்று உறுதி கூறுகின்றான், சூள் உரைக்கின்றான். குறிஞ்சித் திணை.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் பதினைந்தாவது பாடலைக் கவனிப்போம்.

"பறைபடப் பணிலம் ஆர்ப்ப, இறைகொள்பு
தொல்முது ஆலத்துப் பொதியில் தோன்றிய
நாலூர்க் கோசர் நலமொழி போல
வாய் ஆகின்றே தோழி! ஆய்கழல்
சேயிலை வெள்வேல் விடலை யொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே."
இப்பொழுது இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே தலைவியின் பிரிவுக்காக நாம் வருந்த வேண்டியதில்லை. அவள் ஒருவரும் அறியாமல் வீட்டை விட்டு வெளியேறியதனால் நமக்கு எவ்வித இழிவும் இல்லை. அவள் துணைவன் சிறந்த வீரன், சிறந்த வீரகண்டா மணிகளைக் கால்களிலே அணிந்தவன். நல்ல இலை வடிவமான வெள்ளொளி வீசும் வேலாயுதத்தையுடையவன். கட்டிளமையுள்ள சிறந்த தலைவன். இத்தகைய உயர்ந்த உத்தமனுடன்தான் அவள் உடன் போனாள்.

நிறைந்த வளையல்களை அணிந்த முன்கையையுடைய உன் மகள் அவனுடன் கொண்ட ஒருமனப்பட்ட நட்பு மிகவும் உயர்ந்த தாகும்.

கோசர்கள் என்பவர்கள் நான்கு பிரிவுள்ளவர்கள். அவர்கள் பழமையான ஆலமரத்தின் அடியிலே கூடும் பொதுச் சபையிலே தங்குவர். நேர்மை தவறாமல் நீதி மொழிகளைக் கூறுவார்கள். அவர்களுடைய உறுதியான நல்ல மொழி என்றும் உண்மையாக நிலைத்து நிற்கும். அதுபோல உன் மகள் அவனுடன் கொண்ட நட்பு உறுதி பெற்று விட்டது.

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



# தமிழர்கள், 2500 ஆண்டுகளாக தமிழ் மொழியை தனித்துவமாக காப்பாற்றி வருகிறார்கள்!

## நேர்காணல்: தொல்லியல் ஆய்வாளர் சொ. சாந்தலிங்கம்

## நேர்கண்டவர்: தினகரன் ஜெய்

தமிழர் வரலாற்றில் மதுரை கீழடி அகழாய்வு ஒரு முக்கியமான திருப்பு முனை. இந்த அகழாய்வு எந்தளவு முக்கியமானது? இது காட்டும் சங்க கால தமிழர் வாழ்வியல் என்ன? இது தொடர்பாக, தமிழ்நாட்டைச் சேர்ந்த தொல்லியல் ஆய்வாளர் முனைவர் சொ. சாந்தலிங்கம் நமக்களித்த நேர்காணல் இது. தமிழில் 20க்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களையும் Studies in archaeology, Jainism in Pandya Nadu ஆகிய ஆங்கில நூல்களையும் எழுதியுள்ளவர், சொ. சாந்தலிங்கம்.

**மதுரை கீழடி அகழாய்வில் தமிழ் எழுத்துக்கள் கிடைத்துள்ளன. அவை எந்த நூற்றாண்டைச் சேர்ந்தவை?**

தமிழ்நாடு அரசின் தொல்லியல் துறை கீழடியில் மேற்கொண்ட அகழாய்வுகள் குறித்த ஓர் அறிக்கையை வெளியிட்டு இருக்கிறது. அந்த அறிக்கையில், கீழடி அகழாய்வில் கிடைத்த பானை ஓட்டு பொறிப்புகளை கால கணிப்புக்கு உட்படுத்தி அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் உள்ள பீட்டா அனலிசிஸ் முறையில் ஆய்வு செய்து ஒரு முடிவைப் பெற்று இருக்கிறது. அதன்படி கிமு 580 காலத்தில், அதாவது இன்றைக்கு சுமார் 2600 ஆண்டுகளுக்கு முந்தைய சான்றுகள் என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அவர்களால் சொல்லப்படுகிற அறிக்கையின் அடிப்படையில் சுமார் 2600 ஆண்டுகளுக்கு முன்பு அந்த தமிழ் எழுத்துக்கள் எழுதப்பட்டவை என்று உறுதியான முடிவுக்கு வருகிறோம்.

**கீழடியில் கிடைக்கப்பெற்ற தடயங்களின் மூலம் அக்கால தமிழர்களின் வணிக தொடர்பு பற்றி எம்மாதிரியான முடிவுக்கு வர முடிகிறது?**

அந்த தடயங்களில் சில ரோமானியப் பானை ஓடுகள் கிடைத்திருக்கின்றன. அதோடு வேறு சில பானை ஓடுகள், சூது பவள மணிகளால் செய்யப்பட்ட சில மாலைகள் போன்ற பொருள்கள் கிடைத்திருக்கின்றன. சூது பவள மணியின் மூலக் கற்கள் தமிழ்நாட்டை சேர்ந்ததில்லை. அவையெல்லாம் இந்தியாவின் குஜராத் போன்ற பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பட்டவை. எனவே, அங்கிருந்து கொண்டுவரப்பட்ட கற்களாக, மணிகளாக இருக்கலாம். ரோமானியப் பானை ஓடுகளைக் கொண்டு ரோமானியர்களோடு தமிழருக்கு வணிகம் இருந்தது என்பதை உறுதியாக அறிகிறோம்.



**கீழடியில் கிடைத்துள்ள தடயங்களின் வழியாக அன்றைய மக்களின் தொழில் குறித்து எம்மாதிரியான முடிவுக்கு வரலாம்...**

இப்போதைக்குக் கிடைத்த தகவல்களைக் கொண்டு நெசவு தொழிலை செய்திருக்க வேண்டும் என்பதான முடிவுக்கு வர முடிகிறது. அவை தவிர சுடுமண்ணால் ஆன பொம்மைகள், காதணிகள், சங்கு வளையல்கள் கிடைக்கின்றன. கைத்திறன் தொழிலை அவர்கள் செய்திருக்கின்றனர். ஜவுளி தொழிலுக்கான உபகரணங்கள் தயாரிக்கப்பட்டன என்றும் நாம் முடிவுக்கு வர முடிகிறது.

**வேளாண்மை?**

அந்த இடத்தைப் பொறுத்த அளவில் கிடைத்த சான்றுகளில் வேளாண்மைக்கான சான்று எதுவும் இல்லை. இதுவரை வெளிப்படவும் இல்லை. மற்றபடி, ஆதியில், கற்காலத்தில் வாழ்ந்தபோது வேட்டை தொழிலில் இருந்தனர். புதிய கற்காலம் என்று வருகிறபோது மீன்பிடித் தொழிலோடு வேளாண்மை தொழிலையும் செய்தார்கள். அதற்குப் பிறகு உருவான இரும்புக் காலத்தில் இரும்பின் பயன்பாடெல்லாம் வருகின்றபோது பல்வேறு தொழில்கள் உருவாயின. வேளாண்மை உப தொழிலாகவும் குடிசைத் தொழிலாகவும் மாறியது. இவை பற்றி நமக்கு சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

**வழிபாட்டுத் தடயங்கள் கிடைக்கப்பெற்றதா?**

சங்ககாலம் என்று சொல்லக்கூடிய 2600 ஆண்டு கால வரையறையை நாம் இப்போது வைத்துக்கொண்டால், அந்த காலத்தைச் சேர்ந்த எந்தவித சமய சான்றுகளும், கீழடியில் மட்டுமல்ல, தமிழ்நாட்டில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட எந்த அகழாய்வுகளிலும் எந்தவிதமான சமய வழிபாட்டு சான்றுகளும் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக வேறு சில இடங்களில் அகழாய்வு செய்தபோது சூடு மண்ணால் செய்யப்பட்ட பெண் தெய்வ உருவங்கள் கிடைத்திருக்கின்றன அவற்றின் காலத்தை கி.மு. பத்து அல்லது ஒன்பது என்று வரையறை



செய்திருக்கிறோம். எனவே, இப்போது கீழடியை பற்றி மட்டும் சொல்வோமானால் இதுவரை எந்த சமய சான்றுகளும் கிடைக்கவில்லை. ஆதிச்ச நல்லூரில் சங்க காலத்திற்கு முன்பே பெண் தெய்வ உருவம் கிடைத்துள்ளது.

**கீழடியில் வழிபாட்டு தடயங்கள் கிடைக்கவில்லை என்று சொன்னீர்கள் அங்கே வழிபாடு அற்ற சமூகம் தான் இருந்திருக்கும் என்ற முடிவுக்கு வர முடியுமா?**

அக்காலத்தில் தங்களுடைய மூதாதையர்களைத்தான் வழிபட்டனர். தாய் தெய்வங்களை வழிபட்டார்கள். தங்களுக்காக உயிர் நீத்த வீரர்களை வழிபட்டார்கள். புறநானூறு 335ஆவது பாடலிலே 'கல்லே பறவையின் பரவின் அல்லது நெல்லுக் குத்துப் பரவும் கடவுளும் இலமே' என்று ஒரு தொடர் வருகிறது. நாங்கள் நடு கல்லைத் தவிர வேறு எந்த கல்லுக்கும் எந்த தெய்வத்துக்கும் எந்த கடவுளுக்கும் நெல் அல்லது அரிசி அல்லது உணவு சமைத்து வழிபடுவதில்லை என்று அறிகிறோம். எல்லோரும் என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட மக்கள் அப்படிப்பட்ட பண்பாட்டுக்கு உரியவர்களாகவே இருந்திருக்கிறார்கள்.

ஆதிச்சநல்லூர் அகழாய்வுகளே மிகத் தொன்மையானது. 1904இல் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கூட வயிறு புடைத்த ஒரு தாயின் உருவம் தான் கிடைத்திருக்கிறது. எனவே, வீர வழிபாட்டுக்குரியதாக சமூகத்தை, மூதாதையரை வழிபட்ட மக்களாக இருந்திருக்கின்றனர். இப்போது நாம் பார்க்கக் கூடிய தெய்வங்கள் அப்போது இல்லை.

**கீழடியில் சமயம் குறித்து நமக்கு ஏதும் தடயம் கிடைத்திருக்கிறதா?**

இதுவரை கிடைக்கவில்லை. இந்த ஆழத்திற்கு மேல் கிடைக்காது. தெய்வ உருவங்கள் கிடைக்க வேண்டும் என்று சொன்னால் மேல் அடுக்குகளில் அதாவது 10, 8 நூற்றாண்டு அடுக்குகளில் கிடைக்க வாய்ப்பு உண்டு. தாய் உருவம், பால் குடிக்கின்ற குழந்தை உருவம் உள்ள உருவங்கள் கிடைக்கலாம். வேறு சில உருவங்கள் கிடைக்கக்கூடும். ஆனால், தமிழ்நாட்டில் இதுவரை அகழாய்வுகளில் சமயம் சார்ந்த வழிபாடு சார்ந்த தடயங்கள் இதுவரை வெளிப்படவில்லை. தமிழின் தொன்மை குறித்து இதுவரை நிலவி வந்த கருத்துக்களுக்கு கீழடி எந்த வகையில் உறுதியான சான்றாக அமைந்துள்ளது.

தமிழின் தொன்மை குறித்து 2004 வரை நாம் கொண்டிருந்த கருத்து என்னவென்றால் வட இந்தியாவில் இருந்து வந்த சமண துறவிகள்தான் தமிழ்நாட்டிற்கு எழுத்தை கொடுத்தனர் என்பது தான். ஆனால், 2004இல் புலிமான் கோம்பை கல்வெட்டு கண்டறியப்பட்ட பின்னர் அந்த கருத்து மறுக்கப்பட்டது. புலிமான் கோம்பையில் மூன்று நடுகற்கள் கிடைத்திருக்கின்றன. அவை சாமானிய மக்களின் இறப்பு சடங்குகளோடு தொடர்புடையவை. அதில் எந்தவிதமான வட சொற்களும் இல்லை. தனி தமிழில் எழுதப்பட்டவை. இதனுடைய காலத்தை கிமு 4ஆம் நூற்றாண்டு என்று வரையறை செய்கிறோம். அதற்குப் பிறகு பொருந்தல் அகழாய்விலே கிடைத்த எழுத்து பொறிப்பு கிமு 490 காலத்தைச் சேர்ந்தது என்று அமெரிக்கா ஆய்வின் முடிவை பெற்ற போது, கிமு 500 என்று முடிவு செய்தோம். அதற்குப் பிறகு நடைபெற்ற கொடுமணல் அகழாய்வில் 500க்கும் மேற்பட்ட பானை ஓடுகளிலேயே தமிழில் எழுதப்பட்ட குறிப்புகள் இருக்கின்றன. அவற்றில் சிலவற்றை அமெரிக்க நிறுவனத்திற்கு அனுப்பி முடிவுகள் எட்டப்பட்ட போது, கிமு 450 வாக்கில் இந்த எழுத்துக்கள் எழுதப்பட்டன என்ற ஒரு முடிவைப் பெற்றோம். அவற்றை எல்லாம் மாற்றுகின்ற வகையிலே

(தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)






# கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் 'வாழ்நாள் சாதனையாளர் விருது' - 2023

**குரு அரவிந்தன்**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் விருதுவிழா சென்ற சனிக்கிழமை 28-10-2023 ரொறொன்ரோவில் உள்ள ஸ்காபரோ சிவிக்சென்றர் அரங்கத்தில் காலை 10 மணியளவில் மங்கல விளக்கேற்றி கனடா பண்ணுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்தும் அமைதி வணக்கமும் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து கனடா பழங்குடி மக்களின் அங்கீகாரம் வாசிக்கப்பட்டது.

எழுத்தாளர் இணையத்தின் முன்னாள் தலைவரும் தற்போதைய துணைத்தலை வருமான எழுத்தாளர் குரு அரவிந்தனின் வரவேற்புரையைத் தொடர்ந்து தேனுஜா திருமாறன் ஆசிரியரின் மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம் பெற்றது. தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து 'கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் கடந்து வந்த பாதை' என்ற தலைப்பில் உதயன் பத்திரிகை ஆசிரியரும், துணைச் செயலாளருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் உரை இடம் பெற்றது. தொடர்ந்து விருது விழா மலர் வெளியிட்டு வைக்கப்பெற்றது.

